www.Padasalai.Net www.CBSEtips.in

# முதல் இடைப் பருவத்தேர்வு - 2022

**12** - ஆம் வகுப்பு

## பொதுத்தமிழ்

காலம் : 1.30 மணி

மதிப்பெண்கள் : 50

**I பலவுள் தெரிக.** 8 X 1 = 8

1. ஒரு பண்பாட்டின் அடையாளமாக இருப்பது
அ) சொல்வளம் ஆ) தொடரியல் வடிவம் இ) ஒலிக்கோலம் ஈ) ஒலிப்பின்னல்

2. தன்னேர் இலாத தமிழ்பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள பாடல்
அ) தண்டியலங்கார உரைமேற்கோள் பாடல்
ஆ) இறையனார் களவியல் உரைமேற்கோள் பாடல்
இ) நம்பியகப்பொருள் உரைமேற்கோள் பாடல்
ஈ) புறப்பொருள் வெண்பாமாலை உரைமேற்கோள் பாடல்

3. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்
அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்
இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடி நீர் உறிஞ்சப்படுதல்

4. நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது
அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள்
இ) மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள்

5. பொருத்துக.

| | | |
|---|---|---|
| அ) குரங்குகள் | - | 1) கன்றுகளைத் தவிர்த்தன |
| ஆ) பசுக்கள் | - | 2) மரங்களிலிருந்து வீழ்ந்தன |
| இ) பறவைகள் | - | 3) குளிரால் நடுங்கின |
| ஈ) விலங்குகள் | - | 4) மேய்ச்சலை மறந்தன |

அ) 1,3,4,2 ஆ) 3,1,2,4 இ) 3,2,1,4 ஈ) 2,1,3,4

6. "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே" - இந்நூற்பா இடம்பெற்ற இலக்கண நூல்
அ) நன்னூல் ஆ) அகத்தியம் இ) தொல்காப்பியம் ஈ) இலக்கண விளக்கம்

7. "மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு" கவிஞர் குறிப்பிடும் பழமைநலம்,
அ) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது ஆ) பொதிகையில் தோன்றியது
இ) வள்ளல்களைத் தந்தது
அ) அ மட்டும் சரி ஆ) அ,ஆ இரண்டும் சரி
இ) இ மட்டும் சரி ஈ) அ,இ இரண்டும் சரி

8. 'தொலைதூர வெளிச்சம்' என்னும் புதினத்தின் ஆசிரியர் யார்?
அ) பூமணி ஆ) உத்தமசோழன்
இ) சாந்தாதத் ஈ) தோப்பில் முகம்மது மீரான்

**II கீழ்வரும் குறுவினா ஏதேனும் ஒன்றனுக்கு விடையளி.** 1 X 2 = 2

9. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' - விளக்கம் தருக.

10. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

**III ஏதேனும் ஒன்றனுக்கு விடையளி.** 1 X 2 = 2

11. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.
12. எவற்றையெல்லாம் பசுமைக்குடில் வாயுக்கள் என்கின்றோம்?

**IV ஏதேனும் ஒன்றனுக்கு விடையளி.** 1 X 4 = 4

13. முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் - இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருளை அறிந்து தொடர் அமைக்கவும்.
14. உயர்திணைப் பன்மைப் பெயர்கள், பன்மை விகுதி பெற்றுவருமாறு இரண்டு தொடர்களை எழுதுக.

**V ஏதேனும் ஒன்றனுக்கு விடையளி.** 1 X 4 = 4

15. நீர்நிலைகளிலிருந்து உதடுகள் குவித்து உறிஞ்சுகிறது ஒளிக்கதிர்கள் - இக்கவிதையின் அடி 'தூங்கும் பனிநீரை வாங்கும் கதிரோனே' என்னும் நாட்டுப்புறப் பாடலின் தொடர்ச்சியாய் அமைவதைப் பற்றி எழுதுக.
16. 'ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்' - **இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**VI ஏதேனும் ஒன்றனுக்கு விடையளி.** 1 X 4 = 4

17. பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக.
18. சங்கப்பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.

**VII ஏதேனும் ஒன்றனுக்கு விடையளி.** 1 X 4 = 4

19. **இலக்கியம் நயம் பாராட்டுக.**

*வெட்டியடிக்குது மின்னல் - கடல்*
*வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது;*
*கொட்டியிடிக்குது மேகம் - கூ*
*கூவென்று விண்ணைக் குடையுது காற்று*
*சட்டச்சட சட்டச்சட டட்டா - என்று*
*தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்*
*எட்டுத்திசையும் இடிய - மழை*
*எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா!* **- பாரதியார்**

20. பொருள் வேற்றுமை அணியைச் சான்று தந்து விளக்குக.

**VIII அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 3 X 6 = 18

21. அ) நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க.
***(அல்லது)*** தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.
22. நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து என்னும் தலைப்பில் சுற்றுச் சூழல் ஆர்வலர் பசுமை தாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனை கலந்துரையாடல் கருத்துகளைத் தொகுத்து எழுதுக. ***(அல்லது)***
கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.
23. அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்துகொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க. ***(அல்லது)***
பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க.

**IX மனப்பாடப் பகுதி.** 1 X 4 = 4

24. 'வையகம் பனிப்ப' எனத் தொடங்கும் நெடுநல்வாடை பாடலை அடிபிறழாமல் எழுதுக.



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com